## அண்ணாமலை எத்தனை ஆட்டம் ஆடினாலும் தமிழ்நாட்டில் எடுபடாது!

# ‘அதிரடிப்படை’ அமாவாசையாக மாறியதால் - அமாவாசை கணக்குப்போடும் பழனிசாமி!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு அதிரடி பதில்!



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (20–01–2025) சென்னை, வில்லிவாக்கம், அகத்தீஸ்வரர் திருக்கோயிலில் புதிய 5 நிலை இராஜகோபுர கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தார். உடன் வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றியழகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா. சுகுமார், இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, உபயதாரர் என்.ஜெயபால், திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ஜெ.பாஸ்கர் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

சென்னை, ஜன. 21 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (20.01.2025) சென்னை, வில்லிவாக்கம், அகத்தீஸ்வரர் திருக்கோயிலில் ரூ.2.15 கோடி மதிப்பீட்டில் கல்கார மொட்டை கோபுரத்தின் மீது புதிய 5 நிலை இராஜகோபுர கட்டுவதற்கான திருப்பணிகளை தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, வில்லிவாக்கம், தேவி பாலியம்மன் திருக்கோயிலில் நடைபெற்று வரும் திருப்பணிகளையும், வரசித்தி விநாயகர் திருக்கோயில், சௌமிய தாமோதரப்பெருமாள் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், இந்து சமய அறநிலையத் துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் பல்வேறு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில், விஜயநகர மன்னர்களால் கட்டப்பட்ட சுமார் 800 ஆண்டுகள் பழமையான வில்லிவாக்கம், அகத்தீஸ்வரர் திருக்கோயிலில் மன்னர்கள் காலத்தில் அமைக்கப்பட்ட மொட்டை கோபுரத்தின் மீது ஐந்து நிலை இராஜகோபுரம் கட்டுகின்ற பணியை உபயதாரர்கள் நிதியுதவியோடு இன்றைக்கு தொடங்கி வைத்திருக்கின்றோம். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் மொட்டை கோபுரங்கள் எல்லாம் உயர் கோபுரங்களாக மாறி வருகின்றன.

இந்த அரசு ஏற்பட்டபின், ரூ.151 கோடி மதிப்பீட்டில் 80 புதிய இராஜகோபுரங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அதில் 11 இராஜகோபுரப் பணிகள் முடிவுற்றுள்ளதோடு, இதர பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், ரூ.58 கோடி மதிப்பீட்டில் 197 இராஜகோபுரங்களை மராமத்து செய்யும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டு அதில் 94 பணிகள் நிறைவுப் பெற்றுள்ளன. 77 இராஜகோபுர மராமத்து பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த அரசு எதையும் சொல்லி விட்டு போகின்ற அரசு அல்ல. சொன்னதை செய்வதோடு சொல்லாததையும் செய்வோம் என்ற முதலமைச்சர் அவர்களின் தாரக மந்திரத்தை முன்னின்று செயல்படுத்துகின்ற துறையாக இந்து சமய அறநிலையத்துறை திகழ்ந்து வருகிறது. குடமுழுக்குகளை எடுத்துக் கொண்டால் இன்று நடைபெறும் 14 திருக்கோயில்களின் குடமுழுக்கையும் சேர்த்து 2,392 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. அதில் 1,000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 37 திருக்கோயில்களும் அடங்கும்.

### நிலம் மீட்பு!

நில மீட்பு என்று எடுத்துக் கொண்டால் இதுவரை ரூ.7,126 கோடி மதிப்பீட்டிலான 7,387 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கப்பட்டிருக் கின்றது. இதில் பத்திற்கும் மேற்பட்ட சொத்துக்கள் பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளது. மாநில வல்லுநர் குழுவால் வரலாற்றில் இல்லாத அளவிற்கு இதுவரை 11,088 திருக்கோயில்களுக்கு திருப்பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக கடந்த மூன்றரை ஆண்டுகால ஆட்சியில் 5,516 கோடி மதிப்பிலான 23,234 திருப்பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அதில் ரூ.1,261 கோடி மதிப்பிலான 9,899 திருப்பணிகள் உபயதாரர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றில் எந்த காலத்திலும் இந்த அளவிற்கு உபயதாரர்கள் நிதி வழங்கியது இல்லை. இது திராவிட மாடல் ஆட்சியின் மீது உபயதாரர்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ள ஐந்து நிலை இராஜகோபுர கட்டுமான பணியானது உபயதாரர் என். ஜெயபால் அவர்களால் செய்துதரப்படுகிறது.

திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ஏழு கோபுரங்களுக்கு ஒரே நேரத்தில் இன்றைக்கு பாலாலயம் நடைபெற்றுள்ளது. வருகின்ற ஜுலை 7 ஆம் தேதிக்குள் அனைத்து பணிகளையும் நிறைவு செய்து திருச்செந்தூர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்துகின்ற பணிகளை இந்து சமய அறநிலையத்துறையும், மாவட்ட நிர்வாகமும் மேற்கொண்டு வருகின்றது. இந்த திருப்பணிகளின் முன்னேற்றம் குறித்து முதல்வர் அவர்கள் மாதந்தோறும் கலந்தாய்வு செய்கின்றார்.

**கேள்வி :** பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தால் இந்து சமய அறநிலையத்துறையே இருக்காது என்று அண்ணாமலை தெரிவித்துள்ளரே?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** தமிழில் ஒரு பழமொழியை சொல்வார்கள். அத்தைக்கு மீசை முளைக்கட்டும். பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தால்தானே. அதன் தலைவரே இதுவரையில் தமிழக மண்ணில் நின்ற எந்த தேர்தலிலும் வெற்றி என்ற இலக்கை தொடவில்லை. அவர் கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது தமிழ்நாட்டில் இருக்கின்ற 40 தொகுதிகளிலும் திராவிட முன்னேற்ற கழகம் மண்ணைக் கவ்வும் என்றும், குறிப்பாக கொங்கு மண்டலங்களில் டெபாசிட் கூட வாங்காது என்றும் தெரிவித்தார். ஆனால் 40 தொகுதிகளிலும் வென்று காட்டியவர் திராவிட மாடல் நாயகன் எங்கள் முதல்வர் ஆவார். அவர்கள் எவ்வளவு தான் விழுந்து புரண்டாலும், இது போன்ற ஒன்றுமில்லாத செய்திகளை ஊதி பெரிதாக்கி னாலும், 2026 தேர்தலில் மக்கள் அவர்களுக்கு சம்மட்டி அடி கொடுக்க தயாராக இருக்கிறார்கள்.

### திராவிட மண்!

ஒரு மக்கள் பிரதிநிதியாக கூட நீங்கள் கூறிய அந்த நபரால் இந்த தமிழக மண்ணிலே வர முடியாது. ஏனென்றால் இது திராவிட மண். இனத்தால். மதத்தால். மொழியால் பிளவுகள் ஏற்படுத்தி குளிர் காயலாம் என்று நினைப்பவர்களுக்கு இரும்பு மனிதனாக எங்கள் முதல்வர் இருக்கின்றார். இதுபோன்ற பொய் பிரச்சாரங்கள் இனி எடுபடாது. திருச்செந்தூரில் எங்களுக்குள் பேசிக் கொண்டு வந்ததை விசுவலாக எடுத்து போட்டிருக்கிறார்கள். எப்போதும் ஆணவத்தோடு செயல்படுகின்றவர் எங்கள் மீது குற்றச்சாட்டை சொன்னவர்தான். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், என யாரையும் விட்டு வைக்காமல் வசை பாடிக் கொண்டிருக்கின்ற பா.ஜ.க.வின் தலைவருக்கு ஆணவமா அல்லது எங்களைப் போன்ற சமூக அக்கறை கொண்ட, 40 ஆண்டுகளுக்கு மேலாக பொது வாழ்க்கையில் இருப்பவர்களான எங்களுக்கு ஆணவமா என்பதை எங்களது பொது வாழ்க்கையின் வயதை கூட எட்டாதவர் கூறுகின்ற சொல்லை தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

எங்கள் முதல்வர் அன்பின் பிறப்பிடம், அடக்கத்தின் உறைவிடம். அனைவரையும் மதிப்பவர். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு என்ற பேரறிஞர் அண்ணாவின் கருத்தை ஏற்று செயல்படுபவர். இது போன்று அண்ணாமலைக்கு எதுவும் இல்லை என்பதால் எதற்கும் உதவாத பொய் பிரச்சாரங்களை கையில் எடுப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

**கேள்வி :** திமுக ஆட்சிக்கு இன்னும் 13 அமாவாசைகள் மட்டுமே உள்ளது என எதிர்கட்சித் தலைவர் கூறியுள்ளார் ?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** அவர் ஏற்கனவே அதிரடிப்படை அமாவாசையாக மாறியவர்தான். ஆகவே அமாவாசையில் தான் கணக்கு போட்டுக் கொண்டிருப்பார். தமிழ்நாட்டு மக்களின் நலனை கணக்கிட்டு ஆட்சி நடத்துகின்ற எங்கள் முதலமைச்சர் அவர்களின் அரும்பணிகளால், திட்டங்களால் 2026 மட்டுமல்ல, 25 ஆண்டு காலம் இந்த திராவிட மண்ணிலே தமிழகத்தினுடைய முதலமைச்சர் என்ற பதவியை எங்கள் முதல்வர் தான் அலங்கரிப்பார் என்பது திண்ணம்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றியழகன் இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா. சுகுமார், இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, துணை ஆணையர் இரா.ஹரிஹரன், மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர் கூ.பி. ஜெயின், உதவி ஆணையர் கி.பாரதிராஜா, உபயதாரர் என்.ஜெயபால், திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ஜெ.பாஸ்கர் மற்றும் அறங்காவலர்கள், செயல் அலுவலர் அ.குமரேசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் நேற்று (20.01.2025) சென்னை, பெரியமேடு, ஈ.வெ.ரா. பெரியார் நெடுஞ்சாலையில் உள்ள அரசு கவின் கலைக் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், பொதுப்பணித் துறை உயர் அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

**9 முதல் 13க்குட்பட்ட மண்டலத்தில் குடிநீர் விநியோகம் நிறுத்தம்:**

# குடிநீர்க் குழாய் மாற்றியமைக்கும் பணிகள்!

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை,ஜன.21-

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) ஆலந்தூர் மண்டலம், பவுல் வெல்ஸ் சாலையில் பிரதான குடிநீர் குழாய் மாற்றி அமைக்கும் பணிகள் மேற்கொள்வதால் 22.01.2025 நாளை இரவு 09.00 மணி முதல் 24.01.2025 அன்று இரவு 9.00 மணி வரை (48 மணி நேரம்) மண்டலம் 9, 10, 11, 12, 13 - க்குட்பட்ட சில பகுதிகள் மற்றும் பல்லாவரம் நகராட்சிக்குட்பட்ட கவுல் பஜார், பொழிச்சலூர் பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் என்று சென்னை குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) ஆலந்தூர் மண்டலம், பவுல் வெல்ஸ் சாலையில் பிரதான குடிநீர் குழாய் மாற்றி அமைக்கும் பணிகள் மேற்கொள்வதால் 22.01.2025 அன்று இரவு 09.00 மணி முதல் 24.01.2025 அன்று இரவு 9.00 மணி வரை (48 மணி நேரம்) மண்டலம் - 9 (தேனாம்பேட்டை) மண்டலம் - 10 (கோடம்பாக்கம்) மண்டலம் - 11 (வளசரவாக்கம்), மண்டலம் - 12 (ஆலந்தூர்), மண்டலம் - 13 (அடையாறு)- க்குட்பட்ட சில பகுதிகள் மற்றும் பல்லாவரம் நகராட்சிக்குட்பட்ட கவுல் பஜார், பொழிச்சலூர் பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படும்.

மண்டலம் - பகுதிகள் வருமாறு

மண்டலம்-9 (தேனாம்பேட்டை) எம்.ஆர்.சி நகர், மண்டலம்-10 (கோடம்பாக்கம்) ஈக்காட்டுதாங்கல், மண்டலம்-11 (வளசரவாக்கம்) வளசரவாக்கம் (பகுதி), ராமாபுரம், மண்டலம்-12 (ஆலந்தூர்) முகலிவாக்கம், மணப்பாக்கம், நந்தம்பாக்கம், ஆலந்தூர், நங்கநல்லூர், ஆதம்பாக்கம், மீனம் பாக்கம், மண்டலம்-13 (அடையாறு) பள்ளிப்பட்டு, வேளச்சேரி, பல்லாவரம் நகராட்சி கவுல் பஜார், பொழிச்சலூர்

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக் கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம் போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும். மேலும், கூடுதல் தகவல்களுக்கு 044-4567 4567 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மு.சண்முகம் எம்.பி. – கி.நடராசன் – கோ.சி. வள்ளுவன் – இரா.பொன்னுராம் பங்கேற்பு!**

# தமிழ்நாடு மாநில நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகச்சாலை தொ.மு.ச. நிர்வாகிகள் கூட்டம்!

## டி.யு.சி.எஸ். சு.பத்மநாபன் அறிக்கை!

சென்னை, ஜன.21

தமிழ்நாடு மாநில நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் தொழிலாளர் முன்னேற்ற சங்கம், மாநிலத்தில் உள்ள சங்கங்களின் நிர்வாகிகள் கூட்டம் ஜனவரி மாதம் 27.01.2025 காலை 09.30 மணியளவில் தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை அலுவலகமான கலைஞரகத்தில் நடைபெற உள்ளது.

தலைமை : து. பிச்சை, மாநிலத் தலைவர், முன்னிலை : சேலம் பொன்னி, இரா. பழனியப்பன், மாநிலப் பொருளாளர், சென்னை சிந்தாமணி. மரு. இரா. இராஜன், மாநில துணைத்தலைவர், வாழ்த்துரை : தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை பொதுச்செயலாளர் மு. சண்முகம், மாநிலங்களவை உறுப்பினர், கி. நடராஜன் தலைவர், தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவைத் தலைவர், கோ.சி. வள்ளுவன், இரா.பொன்னுராம், பேரவை துணைத்தலைவர், அலுவலகச் செயலாளர், ஆ.சீ. அருணகிரி உழைப்பாளி துணை ஆசிரியர் அவர்கள் மற்றும் பேரவை அனைத்து நிர்வாகிகளும்.

1) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆசியுடன் திராவிட மாடல் ஆட்சி நடத்தும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டு தெரிவித்து, 2026 சட்டமன்ற தேர்தலில் மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைய பாடுபட வேண்டுதல்.

2) மொத்த விற்பனை பண்டக சாலைகள் பணியாளர்களின் ஊதிய உயர்வு ஒப்பந்தம் 31.03.2025 உடன் முடிவடைய உள்ள நிலையில் 01.04.2025 முதல் புதிய ஊதியத்திற்கான கோரிக்கைகள் தயார்படுத்துதல்.

3) சங்கத்தின் வளர்ச்சியை மேம்படுத்துதல் குறித்த ஆக்கப் பூர்வமான ஆலோசனைகள்.

4) சங்கங்களின் வருடாந்திர “இ” படிவம், இணைப்புக் கட்டணம் செலுத்துதல்.

5) தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் இதர அவசர அவசிய தீர்மா னங்கள். தாங்கள், தங்கள் சங்க நிர்வாகிகளுடன் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் மாநிலப் பொதுச் செயலாளர் சு.பத்மநாபன் கேட்டுக்கொண்டுள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பொதுமக்களிடம் இருந்து பெரும்பட்ட மனுக்கள் மற்றும் அங்கன்வாடி சாலை வசதி குடிநீர் வசதி மழைநீர் கால்வாய் புதிய பள்ளி கட்டிடம் மற்றும் பள்ளிப்பட்டு வட்டம் பொதட்டூர்பேட்டை கிராமத்திற்கு அருகில் நகரி திண்டிவனம் ரயில் பாதை அமைக்க நிலம் எடுக்கப்பட்டுள்ளது இதனால் விவசாய நிலத்திற்கு மற்றும் கோவிலுக்கு செல்ல பாதை அமைத்து தர வேண்டும் என மாவட்ட கழகச் செயலாளரும் திருத்தணி சட்ட மன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரன் மாவட்ட ஆட்சியரை சந்தித்து கோரிக்கை மனுக்களை வழங்கினார். உடன் ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் கழக நிர்வாகிகள் விவசாய பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி கண்ணப்பாளையம் பகுதியில் உள்ள மினி 24 மைதானத்தில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை ஆணழகன் போட்டி நடைபெற்றது. இதில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற வீரர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கினார். இதில் ஆவடி மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ் வட்ட கழகச் செயலாளர் ஆனந்த் மாமன்ற உறுப்பினர்கள் சசிகலா ஆனந்த், வீரபாண்டியன் மற்றும் பயிற்சியாளர்கள் பலர் உள்ளனர்.